
# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்

"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 62. சங்க இலக்கியத்தில் மலர்கள் பயன்பாட்டுச் சூழல்

முனைவர் செ.ஜமுனா
தமிழ் உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

சங்க காலத் தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த நிலப் பகுதியை இயற்கையின் சூழலுக்கு ஏற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பிரித்தனர். வறட்சிக் காலத்தில் வளம் குன்றிய குறிஞ்சியும், முல்லையும் பாலை எனப்பட்டது. இந்நிலங்களுக்கான பெயர்கள் அவ்வந்நிலத்தில் கால் கொண்ட சிறப்பான அல்லது மிகுதியான பூக்கள் மற்றும் மரங்களினால் அமைந்துள்ளன.

ஐவகை நிலங்களின் அனைத்துக் கருப்பொருள்களிலும் மலர்கள் மட்டுமே எல்லா வகை மக்களின் வாழ்விலும் இன்றியமையா இடம் பெறுகின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள அனைத்து விழாக்கள் மற்றும் சடங்குகளிலும் மலர்கள் முதன்மை இடம் பெறுகின்றன. அவ்வகையில் சங்க இலக்கியத்தில் மலர்கள் எச்சூழலில் பயன்பட்டுள்ளன என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### நில வருணனை

குறிஞ்சி நிலத்தின் கண் உள்ள ஓர் ஊரில் குறிஞ்சி மலர் மிகுதியாக இருந்தது என்பதை,

"கருங்கோற் குறிஞ்சிநும் உறைவுஇன் ஊர்க்கே"
(அகம்.308)

என்ற வரியால் உணரமுடிகிறது. மேலும் மலையில் குறிஞ்சி மலர்வதை,

"நீள் மலைக் கலித்த பெருங் கோற் குறிஞ்சி"

(நற்.301)

எனும் பாடலடியும் புலப்படுத்துகின்றது. இதனால் குறிஞ்சி மலர் மலர்ந்து மலைப்பகுதியை அழகுறச் செய்தது என்பதை அறியமுடிகிறது.

முல்லைப் பூவின் அரும்புகள் காட்டுப்பூனை சிரித்தாற் போல் காட்சியளிக்கும். அவற்றொடு, மணம் பொருந்திய பிற மலர்களும் முல்லை நிலத்தில் மலர்ந்துள்ளன என்பதை,

"இருவி செர் மருங்கில் பூத்த முல்லை
வெருகு சிர்த்தன்ன, பசுவீ மென் பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்"

(குறுந்.220)

என்ற வரிகளால் உணரடிகிறது.

எருமையானது காஞ்சியின் நுண்ணிய பூந்தாது தன் முதுகில் படியும் படியாகக் கொட்டிலுக்குச் சென்றது என்பதை,

"இரும்பு இயன்றன்ன கருங் கோட்டு எருமை
.................................
காஞ்சி நுண் தாது ஈரசும் புறத்து உறைப்ப"
(அகம்.56)

எனும் வரிகள் விளக்குகின்றன.

உப்பங்கழியில் பசிய இலைகளைக் கொண்ட நெய்தல் மலர்கள் மலர்ந்திருக்கும் கடற்கரைக்குத் தலைவன், என இங்கு நெய்தல் நிலத்தின் வளம் சுட்டப்பட்டுள்ளதை,

"......................கொடுங் கழிப்
பாசடை நெய்தற் பனி நீர்ச் சேர்ப்பன்"

(நற்.287)

எனும் வரியால் அறியமுடிகிறது.

வலஞ்சுரிந்த பூங்கொத்துக்களை உடைய மராம் மரத்தைத் தென்றல் காற்றானது அசைக்கும். அதனால் உதிரும் மலர்கள் சுர

வழியில் செல்லும் வீரர்களின் சுருண்ட தலைமயிரின் மேல் விழும் என இங்கு பாலை நில வழியின் தீங்கு சுட்டப்பட்டுள்ளதை,

''மராஅம் அலைத்த வாய்த் தென்றல்
சுரம் டிசல் மள்ளர் சுரியல் தூற்றும்''
(அகம்.21)

எனும் வரிகள் புலப்படுத்துகின்றன.

## பெண்கள் வருணனையில் மலர்கள்

சங்கப் புலவர்கள் பெண்களின் தலை முதல் பாதம் வரை மலர்களைக் கொண்டு வருணித்துள்ளார். பெண்களின் மென்மைத் தன்மை காரணமாக மலர்களோடு ஒப்பிட்டுக் கூறுவது வழக்கமாகும். இவ்வாறு பெண்களையும், பூவையும் ஒப்பக் கருதிய புலவர்கள் பெண்களை மலர்களின் மூலமாகவே வருணனை செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

பரத்தையர் இனப் பெண், வண்டுகள் மொய்க்கும் மரா மரத்தின் பூங்கொத்துக்கள் கமழும் கூந்தலை உடையவள் என நற்றிணை குறிப்பிட்டுள்ளது. இதை,

''......................................... அவிழ் இணர்த்
தேம் பாய் மராஅம் கமழும் கூந்தல்'' (20)

எனும் வரிகளால் உணரமுடிகிறது. தலைவியின் நெற்றி போன்று மணம் வீசும் முல்லை மலர் என்று இங்கு முல்லை மலரைக் காட்டிலும் தலைவியின் நெற்றி உயர்வாகக் கூறப்பட்டுள்ளதை,

''நின் நன்னுதல் நாறும் முல்லை மலர'' (ஐங்.492)

என்ற வரியால் உணரமுடிகிறது. குவளை மலர் போன்ற அழகான குளிர்ச்சி உடையன தலைவியின் கண்கள் என்பதை,

''குவளை அன்ன ஏந்து எழில் மழைக் கண்'' (நற்.6)

என்ற வரியால் அறியமுடிகிறது. தலைவியின் கண்கள் பத்திக மலரின் புறஇதழ் போன்று, சிவந்த கடைப்பகுதியை உடையது என்பதை,

"மாரிப் பித்திகத்து ஈர்இதழ் புரையும்

அம்கலுழ் கொண்ட செங்கடை மழைக்கண்" (அகம்.295)

எனும் அடிகள் விளக்குகின்றன. பெண்களின் கண்களுக்கு அதனோடு ஒத்த வடிவமும், நிறமும் கொண்ட மலர்களே உவமைப் பின்புலமாகப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன.

## தெய்வ வருணனையில் மலர்கள்

சிவபெருமானுக்கு உகந்த மலராகக் கொன்றை மலர் கூறப்படுகிறது. சிவபெருமான் கொன்றை மலர் சூடியதை, அகநானூறு கடவுள் வாழ்த்துப் பாடல் கூறுகிறது. இதை,

"கார் விரி கொன்றைப் பொன் நேர் புதுமலர்த்

தாரன், மாலையன் மலைந்த கண்ணியன்"

எனும் வரிகள் விளக்குகின்றன. இமயமலையில் உள்ள நீலமலர்களை உடைய சரவணப் பொய்கையில் தாமரைப் பூவாகிய பள்ளியுள் ஆறு மகளிர் ஒரு சேர முருகனைப் பெற்றெடுத்தனர். இதை,

"நிவந்து ஓங்கு இமயத்து நீலப் பைஞ் சுனைப்

பயந்தோர் என்ப பதுமத்துப் பாயல்

பொதும்பெயர் முருக ......" (பரி.50-52)

ஆகிய வரிகள் விளக்குகின்றன. திருமாலிடமிருந்து தாமரை மலர் தோன்றியதாகக் கூறப்படுகிறது. இதை,

"நின்னில் தோன்றிய நிறை இதழ்த் தாமரை" (பரி.4:60)

எனும் அடியால் அறியமுடிகிறது. திருமாலிடத்துத் தோன்றிய பொருள்களைக் கூறுமிடத்து திருமாலின் கொப்பூழில் தோன்றிய தாமரை மலரிலிருந்து பிறந்தவன் பிரம்மன் என்று கீழ்க்காணும் பாடல் குறிப்பிடுகிறது.

"வாய்மொழி ஓடை மலர்ந்த

தாமரைப் பூவினுள் பிறந்தோனும்....."

(பரி-3: 12-13)

மற்ற மலர்களை விடவும் கடவுளர்க்கும் தாமரைக்கும் உள்ள பிணைப்பற்குக் காரணம் தாமரை தெய்வத் தன்மையுடைய மலராகக் கருதப்படுகிறது. புனிதமான தூய்மையான, இறைத்தன்மை வாய்ந்ததாகத் தாமரை கருதப்படுவதற்குக் காரணம் அதில் தெய்வங்கள் உறைவதால் தான் என்பதை அறியமுடிகிறது.

## கற்பு மலர் முல்லை

சங்க காலத்தில் பெண்களின் கற்பிற்கு அடையாளமாக முல்லை மலர் கருதப்பட்டுள்ளது. மேலும் கற்புடைய குல மகளிர்க்கு முல்லை மலர் உவமையாகவும் கூறப்படுகிறது. ஏனெனில் முல்லை மலரைக் குல மகளிரைத் தவிர பிற பெண்கள் அணிவதில்லை. குறிப்பாகப் பரத்தையர் இனப் பெண்கள் அணிவதில்லை என்பதைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாகின்றது.

> "முல்லை சான்ற கற்பின்
> மெல்இயற் குறுமகள்................." (அகம்.274)

> "முல்லை சான்ற கற்பன் மெல்இயல்" (சிறுபாண்.274)

ஆகிய இலக்கிய வரிகள் முல்லை மலரைக் கற்பின் அடையாளமாகக் குறிக்கின்றன.

## எண்ணுப் பெயர்களில் மலர்கள்

நெய்தல், குவளை, ஆம்பல், கமலம் என்பன மலர்களின் பெயரால் அமைந்த பேரெண்ணுப் பெயர்கள். இதனை,

> "நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
> மைஇல் கமலமும் வெள்ளமும் நுதலிய
> செய் குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை" (பரி.2: 13-15)

எனும் வரிகளால் அறிய முடிகிறது.

## உணவுப் பொருள் வருணனையில் மலர்கள்

ஞாழல் மலர் ஐயவி என்ற வெண் சிறு கடுகிற்கும், தினைக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளதை,

"ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்" (குறுந்.50)

"நனை முதிர் ஞாழல் தினைமருள் திரள்வீ" (குறுந்.397)

என்ற வரிகள் விளக்குகின்றன. அவரை மலர் தயிரின் பதிர்வு போன்று நிலத்தில் உதிரும். இதை,

"விளைதயிர்ப் பிதிர்வின் வீஉக்கு இருவி தொறும்,
குளிர் புரை கொடுங்காய் கொண்டன அவரை"
(மலைபடு.109-110)

என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறாகப் புலவர்கள் மலர்களின் மேல் கொண்ட தீராக்காதலால் தாம் காணும் அனைத்திலும் மலர்களின் வடிவம், நிறம், தன்மை ஆகியவற்றைச் சரியாகப் பொருத்தி உவமை கண்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## விலங்கு வருணனைகளில் மலர்கள்

ஊகம் புல்லினது பூ அணிலின் வால் போன்று இருப்பதாகப் புலவர் குறிப்பிட்டுள்ளார். இதை,

"வெனல் வரிஅணில் வாலத்து அன்ன
கானஊகின் கழன்று உகு முதுவீ" (புறம்.307)

என்ற வரிகளால் அறியமுடிகிறது. ஓந்தியின் கருமையான தாடிக்குக் குவளையின் மொட்டுக்கள் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளன. இதனை,

"வைவால் ஓதி மைஅணல் ஏய்ப்பத்
தாதுஉறு குவளைப் பொதுபிணி அவிழ"
(அகம்.125)

என்ற வரிகளால் அறிய முடிகிறது.

“புகழா வாகைப் பூவின் அன்ன
வளை மருப்பு ஏனம்” (பெரும்:109-110)

என்ற இப்பாடலில் காட்டுப் பன்றியின் கொம்பு வாகைப்பூ போன்று வளைந்த வடிவமுடையதாகக் கூறப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் பாம்பு பல இடங்களில் இடம் பெற்றுள்ளது. பெரும்பாலும் பாம்பிற்கு உவமையாகக் காந்தள் மலரே குறிப்பிடப்பட்டுள்ளது. சான்றாக,

“பாம்புபை அவிந்தது போலக் கூம்பி
கொண்டலின் தொலைந்த ஒண்செங் காந்தள்”
(குறுந்.185)

என்ற பாடலைக் குறிப்பிடலாம். உயிருள்ள அஃறிணைப் பொருட்களின் வடிவம், நிறத்தினைப் புலப்படுத்தும் வகையில் மலர்கள் பயன்பட்டது போன்றே உயிரற்ற அஃறிணைப் பொருட்களின் நிறம், வடிவம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் மலர்கள் பயன்பட்டுள்ளன.

மலர்களின் நிறம், வடிவம் ஆகியவை பற்றி சங்ககாலப் புலவர்களால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்களிடம் இருந்த மலர்கள் மற்றும் தாவரங்கள் குறித்த ஈடுபாடு, நுண்ணறிவு அறிவியல் நோக்கு ஆகியவை மேம்பட்டு விளங்கியுள்ளன என்பதைக் காணமுடிகிறது. மலர்கள் சங்க காலச் சமூகத்தில் பண்பாட்டின் வெளியீடாகவே அமைந்துள்ளன. மக்கள் மலர்களைப் பயன்படுத்துவதில் தனி ஈடுபாடும், அறிவியல்சார் அறிவும் கொண்டு விளங்கியுள்ளனர் என்பது அறியமுடிகிறது. இங்ஙனம், மலர்களின் பயன்பாட்டுச் சூழல் குறித்து அறியவியலுகிறது.